மீடியா செய்தி
MEDIA SEITHI தமிழ் நாளிதழ்
RNI NO : TN TAM/2018/73491 mediaseithi@gmail.com
மலர் – 0 இதழ் – 356 சென்னை 04.10.2025 சனிக்கிழமை ஆண்டு சந்தா 1800/– பக்கம் – 4 விலை ரூ. 5.00

# ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் கணிப்பொறியியல் துறை சார்பாக புதுமை விழா எனும் திங்க்ஃபினிட்டி ஹேக்கத்தான் 2கே25




பெரியபாளையம்,அக்4

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் கணிப்பொறியியல் துறை சார்பாக புதுமை விழா எனும் திங்க்ஃபினிட்டி ஹேக்கத்தான் 2கே25 நடைபெற்றது.

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் கணிப்பொறியியல் துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட திங்க்ஃபினிட்டி ஹேக்கத்தான் 2கே25 கல்லூரி வளாக கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,சென்னை சிஇஓ ஏஜஎம்எல் கிளவுட் ஸ்மார்ட் மொபிலிட்டி, டெக்னோசைன் நெட்வொர்க்கிங் கன்சல்டன்சி முனைவர் ஆர்.பூவேந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தலைமை தாங்கினார். ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ்பாபு, கணிப்பொறியியல் துறை தலைவர் முனைவர் பி.மகேஷ், கணிப்பொறியியல் துறை பேராசிரியர் முனைவர் என்.ஆர்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக அனைவரையும் கணிப்பொறியியல்துறை பேராசிரியர்(ஒருங்கிணைப்பாளர்) முனைவர் எம்.குமார் வரவேற்றார்.கணிப்பொறி அறிவியல் துறை

இ ட் ட த் த லை வ ர் ஏ.லாவண்யா தலைமை விருந்தினரை அறிமுகப்படுத்தி பேசினார்.

இளம் புதுமை ஆர்வலர்களை ஒன்றிணைத்து அவர்களின் தொழில்நுட்பத் திறன்கள், படைப்பாற்றல் மற்றும் உடனடி குறைதீர்க்கும் திறன்களை வெளிப்படுத்தும் விதமாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது.

அணிக்கு நான்கு உறுப்பினர்கள் என புதுமை சாத்தியக்கூறு தொழில்நுட்ப செயல்படுத்துதல் மற்றும் விளக்கக் காட்சி திறன்கள் ஆகியவற்றை மையமாக கொண்டு இந்நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

எஸ்.ஏ.பொறியியல் கல்லூரி, கொங்குநாடு பொறியியல் கல்லூரி,டி.எம்.ஐ பொறியியல் க ல் லூ ரி , அ ப் ப ல் லோ பொறியியல் கல்லூரி,சவிதா பல்கலைக்கழகம்,ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி,பிரத்யூஷா பொறியியல் கல்லூரி,பனிமலர் பொறியியல் கல்லூரி, ஜி.ஆர்.டி.இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி,வேலம்மாள் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி,திருச்சி

எம்.ஐ.இ.டி பொறியியல் கல்லூரி,ஜெயா பொறியியல் கல்லூரி என 35க்கும் மேற்பட்ட கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில்,சென்னை, சவிதா பல்கலைக்கழகம் முதல் பரிசாக ரூ.5,000ம்,வேலம்மாள் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி,

இரண்டாம் பரிசாக ரூ.3,000ம்,

ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி மூன்றாம் பரிசாக ரூ.1,500ம்,ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி மற்றும் பிரத்யூஷா பொறியியல் கல்லூரி ஆகியவை நான்காம் பரிசாக ரூ.750ம் பெற்றனர்.நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியின் நிறைவாக கணிப்பொறியியல் துறையின் உதவி பேராசிரியர்

பிரவீனா நன்றி கூறினார்.